முருகப்பெருமான் துணை

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

22.08.2024

1. கந்தமுகமே பசிபிணி விரட்டும்
   கருணை வடிவாக அரங்கன் என்னை
   இந்த கலியினில் அவதாரமாக்கி
   ஏழாம் படை வீடு தனை படைத்து

2. படைத்துமே பிரணவக் குடிலென
   பாருலகில் தருமம் வளர்த்தருள
   தடையற உலகே வியந்திட
   தருமம் பெருக்கி அரங்கன் யானும்

3. யானும் இந்த சேவை காத்ததால்
   எந்தனை சரவண ஜோதி வடிவாக்கி
   ஞானம் யாவர்க்கும் எளிதாக்கிட
   ஞானிகள் பேசும் அருட்சுவடிவழி

4. வழிதனில் எந்தனையும் வழிநடத்தி
   வாய்ப்பருளும் முருகா உமை போற்றி
   அழிவிலா குரோதி வேங்கை திங்கள்
   அறிவிப்பேன் முதல் குருவார அருளாசி

5. அருளாசி உலக மக்களுக்கு அரங்கனும்
   ஆற்றல் பெருகிட அருளுவேன்
   வரம் தரும் ஏழாம் படை வீடாம்
   வடிவேலன் அமுதாய் கலந்தருளும்

6. அருளும் பிரணவக் குடில் தொடர்பை
   அகிலத்தார் உருவாக்கி வருக
   வரம் தா என வேண்டி கலந்து
   வழிபாட்டுடன் தருமத்தில் உதவி

7. உதவியே அருளமுது உண்டு
   உயிர்க்கொலை நீக்கும் வழிவகையை
   ஆதரித்து ஆயுளும் கடைப்பிடிக்க
   ஆன்ம பலம் ஞானத்தெளிவு கூடி

8. கூடியே தன் பிறவி பயன்
   குறைவிலா அடையும் சூட்சுமம்
   நாடியே இவை பிறவி தன்னிலே
   ஞானிகளின் அனுகூலம் அடையும்

9. அடையும் வழிவகை உருவாகி
அரங்கன் என்பால் சரணாகதி
தடையறப் பெருகி நின்று
தானவர்கள் தவசிகள் ஏற்று சிறப்பர்

10. சிறப்புதரும் கலியின் சிறந்த மார்க்கம்
சித்தி தரும் அரங்கனென் சன்மார்க்கமே
மறுப்பின்றி ஏற்றால் போதும்
மரணமிலா பெருவாழ்வாய் மாறுமப்பா
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–